04-03-2022
O.S.296/2018
வா.சா. 1 திரு.நாகராஜன் வேலு

வா .சா. 1 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..இல்லை.

குறுக்கு விசாரணை( வாதிகள் தரப்பில்)

நான் 1 ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர். நான் எம்.ஏ. பொருளாதாரம் மற்றும் பிஸ்னஸ் மேனேஜ்மெண்ட் படித்திருக்கிறேன். தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் பேசவும் படிக்கவும் தெரியும் எழுத தெரியாது எனக்கு தாய்மொழி கன்னடம். எங்கள் நிறுவனம் பெங்களூர் ஒயிட்பீல்டு ஏரியாவில் இருக்கிறது. அந்த நிறுவனம் எங்களது சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. பிரச்சனைக்குரிய மெசினகளை வாங்கி விற்கும் வகையில் எனக்கு அந்த மெசின் சம்மந்தப்பட்ட செயல்பாடுகளில் எனக்கு பரிட்சயம் இருக்கிறது என்பது சரிதான். எங்கள் நிறுவனத்திற்கு தமிழ்நாடு திருப்பூரில் ஒரு கிளை இருக்கிறதா என்றால் இருக்கிறது. திருப்பூரில் சேல்ஸ் அண்டு சர்வீஸ் செய்து வருகிறோம் அது தற்போதும் இயங்கி வருகிறது . பிரச்சனைக்குரிய மெசின் சம்மந்தப்பட்ட தகவல்கள் எங்கள் நிறுவனம் தொடர்புடைய வெப்சைட்டில் வெளியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் பிராதில் சொல்லியுள்ள பிரச்சனைக்குரிய மெசின்களை எங்கள் நிறுவனத்தில் வாங்கியதாக சொல்வது சரிதான். அந்த மெசின்கள் எவ்வாறு இயக்குவது சம்மந்தமாக 1 ம் வாதி ராஜேந்திரனுக்கு ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டதா என்றால் ஒரு நாள் பயிற்சி கொடுக்கப்பட்டது. அது குறித்து வா.சாஆ 1 ன் படி 1 ம் வாதிக்கு எங்களால் ஒரு சான்று வழங்கப்பட்டிருப்பதாக சொல்வது சரிதான். வாதிகள் எங்கள் நிறுவனத்தின் 10 மெசின்கள் வாங்குவதற்கு கொட்டேசன் கேட்டு வா.சா.ஆ 2 ன்படி ஒரு இன்வாய்ஸ் பெற்றார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ன் படி 10 மெசின்களுக்கும் உரிய தொகை மற்றும் ஜி எஸ் டி உட்பட 22,95,000/- என்பது சரிதான். மேற்படி தொகையில் வாதிகளின் சொந்த முதலீடாக ரூபாய் 8,05,000/- எங்களிடம் கொடுத்தார்கள் என்றால் அதில் ரூபாய் 8 லட்சத்தை எங்களிடமே வாதிகள் கடனாக வாங்கி திரும்ப எங்களிடமே கொடுத்தார்கள். மேற்கூறிய ரூபாய் 8 லட்சத்தை வாதிகள் எங்களிடம் எந்ததேதியில் கடனாக வாங்கினார்கள்

எந்ததேதியில் வாதிகள் கடனை திருப்பி கொடுத்தார்கள் என்றால் 15-7-2015 ல் எங்களிடம் வாங்கினார்கள். அதனை மறுநாளே எங்களிடம் திருப்பி செலுத்தினார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 தேதி 14-11-2014 தேதியிட்டது என்பது சரிதான். மேற்படி தொகை ரூபாய் 8 லட்சத்தை யாரிடம்கொடுத்தீர்கள் என்றால் வாதி நிறுவனத்தின் பங்குதாரர் என்ற முறையில் ஜெகதீசிடம் கொடுத்தேன். அதனை வங்கி டிரான்ஸ்பர் மூலம் எங்களால் ஜெகதீசுக்கு கொடுக்கப்பட்டது . மேற்படி தொகையை வாதியின் நிறுவனத்திற்கு கொடுத்தீர்களா அல்லது தனிப்பட்ட முறையில் ஜெகதீசுக்குகொடுத்தீர்களா என்றால் மேற்படி நிறுவனத்திற்காகத்தான் ஜெகதீசிடம் கொடுத்தோம். எங்களால் வங்கிமூலம் டிரான்ஸ்பர் செய்யப்பட்டதொகையை ஜெகதீசின் தனிப்பட்ட வங்கி கணக்கில் டெபாசிட் செய்தீர்களா அல்லது வாதி நிறுவனத்தின் வங்கி கணக்கில் டெபாசிட்செய்தீர்களா என்றால் ஜெகதீசின் தனிப்பட்ட வங்கி கணக்கில் டெபாசிட்செய்யப்பட்டது. அவ்வாறு ஜெகதீசின் தனிப்பட்ட வங்கி கணக்கில் மேற்படி தொகை டெபாசிட் செய்யப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கிறீர்களா என்றால் எங்கள் வசம் இருக்கிறது . என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ 1 ல் 15-11-2014 தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ 3 ன் படி ஜெகதீஸ் ரூபாய் 8 லட்சத்தை எங்களிடமிருந்து தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொண்டதாக சொல்லி ஒரு இரசீது கொடுத்திருப்பதாக சொல்வது சரிதான். அதில் வாதி நிறுவனத்திற்காக பெற்றுக் கொண்டதாக குறிப்பாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 இன்வாஸ்சில் 11 வது நிபந்தனையாக Service and Warranty என்ற தலைப்பில் Free installation and one year warranty against manufacturing defects என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக சொல்வது சரிதான். 4 ம் பிரதிவாதி தரப்பிலிருந்து லோன் தொகையாக ரூபாய் 14.90 லட்சத்தை எங்களுக்கு நேரடியாக காசோலையாக வழங்கப்பட்டதாக சொன்னால் சரிதான். 10 மெசின்களின் தொகை முழுவதும் தங்களுக்கு வந்து விட்டதா என்றால் இல்லை பகுதியாக வந்துள்ளது. 10 மெசின்களுக்குரிய கிரைய தொகை முழுவதையும் நான் பெற்றுக்கொண்டு விட்டதாகவும் வழக்கிற்காக பகுதியாக கிரையத்தொகை பெற்றிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையத்தொகை முழுவதும் எங்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக சொல்லி வாசா.ஆ 4 ல்

சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் சரிதான். 10 மெசின்களையும் சீனாவிலிருந்து சென்னை வழியாக வாதிகள் நிறுவனத்தில் நேரடியாக டெலிவரி செய்யப்பட்டது. அவைகளை எங்கள் நிறுவனத்தில் இறக்கி பின்னர் வாதிகளுக்கு டெலிவரி கொடுக்கவில்லை. மெசினரியை இன்ஸ்டால் செய்து கொடுத்தது நான்தான். பெங்களூரிலிருந்து எங்கள் நிறுவனம் சார்பாக பொறியாளர்கள் வாதியின் நிறுவனத்திற்கு வந்து இன்ஸ்டால் செய்து கொடுத்தார்கள். மெஷினரி வாதிகளின் நிறுவனத்தில் வந்து இறக்கப்பட்டஅதே தினம் பெங்களூரிலிருந்துபொறியாளர்கள் வந்துஅவைகளை இன்ஸ்டால் செய்தார்கள் என்றால் இரண்டு நாட்கள் கழித்து எங்கள் ஆட்கள் வந்து இன்ஸ்டால் செய்து கொடுத்தார்கள். அப்போது நான் நேரடியாக வாதிகளின் நிறுவனத்திற்கு வரவில்லை. மெசினரியை இன்ஸ்டால்செய்வதற்கு தேவைாயன இடவசதி மற்றும் மின் இணைப்பு ஆகியவை தயார் செய்யப்பட்டிருந்ததாக எங்கள் பொறியாளர்கள் உங்களிடம் தெரிவித்தார்களா என்றால் அவ்வாறுதான் தெரிவித்தார்கள். வாதிகள் தரப்பில் அவர்கள் குடியிருக்கும் கட்டிடத்தின் முதல் தளத்தில் மெசினரியை பொறுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அதற்கும் அடுத்த மேல் தளத்தில் ஜெனரேட்டர் உள்ளிட்ட உபகரணங்கள் பொறுத்தவாதிகளால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததாக தெரிந்து கொண்டீர்களா என்றால் எனக்கு தெரியாது. மெசினரிகள் வாதிகள் நிறுவனத்தில் டெலிவரி கொடுத்தஅன்று அவைகளை இன்ஸ்டால் செய்வதற்கு தேவையான மின் வசதிகள் தயார் செய்யப்பட்டிருந்தது . அவ்வாறு நான் சொல்வது தவறு என்றும் மெசினரி டெலிவரி கொடுத்த அன்று அவைகளை இயக்குவதற்கு தேவையான மின் இணைப்புகள் சரியாக ஏற்பாடு செய்யப்படாமல் இருந்ததாக சொல்வது சரியல்ல. 27-2-2016 ல் வா.சா.ஆ 5 ன் படி எங்கள் ஆட்கள் மெசினரி பொருத்தப்பட்டு விட்டதாக 4ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு டெக்னிக்கல் ரிப்போர்ட் கொடுத்திருப்பதாக சொன்னால் சரிதான். வா.சா.ஆ 5ல் M/C under warranty – Yes என்றுகுறிப்பிடப்பட்டிருப்பதாகவும்மேலும் M/C under AMC -(Annual Maintanance Constract) -Yes என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் சொன்னால் சரிதான். மேலும் அதே ஆவணத்தில் மூன்று மெசின்களில் பிரச்சனை இருப்பதாக சொல்லி எங்கள் பொறியாளர்களால் குறிப்பாக சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் சரிதான். மேலும் அதே ஆவணத்தில் கிராஸ் மார்க் செய்து ரிமார்க்ஸ் என்ற

பகுதியில் ( All machine count and time button-02 not working) என்று குறிப்பிட்டிருப்பதாக சொல்வது சரிதான். மேற்கூறிய குறைபாடுகளை சரிசெய்து கொடுக்கும்படி வாதிகள் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அதற்கு நான் பொறியாளர்களை அனுப்பி சரி செய்து கொடுத்தேன். என்னால் அனுப்பப்பட்ட பொறியாளர்கள் வந்து பார்த்து விட்டு அவைகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்ய முடியாது என்று சொல்லிவிட்டு சென்று விட்டதாக சொல்வது சரியல்ல. வா.சா.ஆ 10,11 ன் படி எங்களால் வாதிகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக சொல்வது சரிதான். எங்கள் பொறியாளர்களுடன் சீன பொறியாளர் திரு. லீ என்பவரும் வாதிகளின் நிறுவனத்திற்கு வந்து மெசினரியை பார்வையிட்டதாக சொன்னால் சரியல்ல. சீன பொறியாளரின் விமான டிக்கெட் உள்ளிட்ட ஏற்பாடுகளை நாங்கள்தான் செய்துகொடுத்ததாக சொல்லி ஆவணங்கள் தாக்கல் செய்து விட்டு தற்போது அதற்கும் முரணாக இல்லை என்று மறுப்பு செய்கிறேன் என்றால் சரிதான். அந்த பொறியாளரின் பெயர் திரு. லீ இல்லை. அவர் பெயர் Huchong என்பதாகும். சீனாவில் இருந்து வந்தபொறியாளர்களை வாதிகள் மெசின்களை பார்வையிட அனுமதிக்கவில்லை . மேற்கூறிய சீன பொறியாளர்களை நான் பார்த்திருக்கிறேன். எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் யார் லீ யார் குச்சாங் என்றால் என்னிடம் காட்டப்பட்ட புகைப்படங்களில் இருக்கும் இருவரும் மேற்கூறிய பொறியாளர்கள் இல்லை. சீன பொறியாளர்கள் வாதிகள் நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த மெசின்களை பார்வையிட அனுமதிக்கவில்லை என்று கூறுவது தவறு என்றும் அவர்கள் மெசின்களை இயக்குவதற்கு ஏற்பாடுசெய்து பார்த்துவிட்டு அவைகளை சரிசெய்ய முடியாது என்றும் பழைய இரும்பு கடைக்குத்தான் அனுப்ப முடியும் என்று சொல்லிவிட்டுசென்று விட்டதாக சொல்வது சரியல்ல. மெசினரியை பழுது நீக்கி கொடுக்க வேண்டும் என்றும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று வாதிகள் தரப்பில் நேரடியாகவும்தபால் மூலமாகவும் வழக்கறிஞர் மூலமாகவும் கேட்டுக்கொண்டதாகவும் சொன்னல் சரிதான். அவைகளுக்கு எங்களால் பதில் கொடுக்கப்பட்டுள்ளது. என்னால்சொல்லப்படுவது போல் எந்தவொரு பதிலும் வாதிகளின் அறிவிப்பிற்குகொடுக்கப்படவில்லை என்றும்தற்போதுதான் அவ்வாறு பதில் கொடுத்திருப்பதாக முதன் முதலில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பதில் கொடுத்திருப்பதாக சொல்லி ஆவணங்கள் எதுவும் எங்கள்

தரப்பில் தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் சரிதான். வாதிகள் தங்களுக்கு சொந்தமான கட்டிடத்தை 4 ம் பிரதிவாதி நிறுவனத்தில் அடமானம் வைத்து கடன் பெற்று மெசினரி எங்கள் மூலமாக வாங்கி மேலே கூறியவாறு இயக்கப்படாத நிலையில் வாதிகள் பெருத்த நஷ்டத்தை சந்தித்திருப்பதாகவும் அதனால் 4 ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை வாதிகள் திருப்பி செலுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் சொன்னால் சரியல்ல. மெசினரி மற்றும் கட்டிடம் ஆகியவை 4 ம் பிரதிவாதி நிறுவனத்தால் கடனுக்காக ஏலத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது தெரியுமா என்றால் தெரியாது.

(கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )

Sd/- Nagarajanvelu

Sd/- P.Elango,
III ADJ Salem.